# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - 2016

தரம் : 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - I

7

45 நிமிடம்

சுட்டெண் .......................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- ஒவ்வொரு வினாவிலும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |


✣ **1ஆம், 2ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள படத்துடன் மிக நெருக்கமான சொற்கூட்டத்தைத் தெரிவுசெய்க.**

*01.* 

1) பார்த்தல், இயற்கை, வீடு

2) கேட்டல், பார்த்தல், செயற்கை

3) வீடு, கேட்டல், இயற்கை

*02.* 

1) காற்று, செயற்கை, விண்

2) மழை, விண், செயற்கை

3) இயற்கை, காற்று, விண்

✣ **3ம், 4ம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

*03.* மின்சாரம் - ஒளி - வெப்பம்

1. 


2. 

3. 

*04.* முலையூட்டி - மாமிச உண்ணி - மிருகம்

1. 

2. 

3. 

✣ **கீழே தரப்பட்ட பாடலடிகளைக் கொண்டு 5 ஆம், 6 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து கோடிடுக.**

நதியில் நீச்சல் அடித்திடுமே
நாக்கால் பூச்சி பிடித்திடுமே
அதிகம் பேசி ஆடிடுமே
அழிவை அதுவே தேடிடுமே.

*05.* பாடலில் கூறப்பட்ட பிராணி எது?

1. தவளை　　2. பல்லி　　3. ஓணான்

*06.* பாடலில் கூறப்பட்ட பிராணி இரையை எவ்வாறு பிடிக்கின்றது?

1. காலால்　　2. சொண்டால்　　3. நாக்கால்

*07.* ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள செயற்பாட்டினை ஒழுங்குபடுத்தும்போது சரியாக அமையும் விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.

A - தானியத்தை விதைத்தல்　　B - அறுவடை செய்தல்

C - நிலத்தைப் பண்படுத்துதல்　　D - பயிர்களைப் பராமரித்தல்

1. CABD　　2. CADB　　3. CDAB

சுட்டெண் :...................


08. மரதன் ஓட்டப் போட்டியில் குமரன் முதல் தடவை தோல்வியடைந்தான். அவன் விடாது பயிற்சியில் ஈடுபட்டு பின்னர் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றான். இச்சம்பவத்துடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்க.

1) ஆழமறியாமல் காலை விடாதே.

2) இளங்கன்று பயமறியாது.


3) முயற்சி திருவினையாக்கும்.

09. தரப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து 9 ஆம், 10 ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.





1) 5 2) 15 3) 8

10.





1) 70 2) 48 3) 49

11. இவ் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1) 8 2) 6 3) 5

12. தரப்பட்ட உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1) 6 2) 7 3) 10

13. சரியான கோவையைத் தெரிவுசெய்க.

1) 6 x 5 + 5 = 25

2) 12 + 8 - 10 = 30

3) 4 x 3 + 4 = 16

14. பிழையான கோவையைத் தெரிவுசெய்க.


1) 333 + 33 + 3 = 369  2) 444 + 44 + 4 = 482  3) 555 + 55 + 5 = 615

15. மைதானத்தில் ஆசிரியரை மையமாகக் கொண்டு பிரதான திசைகள் நான்கிலும் சம எண்ணிக்கையில் மாணவர்கள் நின்றனர். அங்கு நின்ற மாணவர்களின் கால்களின் எண்ணிக்கை முப்பத்து இரண்டு ஆகும். ஒரு திசையில் நிற்கும் மாணவர்கள் எத்தனை பேர்?

1) 16  2) 4  3) 8

16. 200 லீற்றர் கொள்ளளவுடைய தொட்டி ஒன்றிற்கு நிமிடத்திற்கு 40 லீற்றர் நீர் ஊற்றப்படும் அதேவேளை அத்தொட்டியிலிருந்து 20 லீற்றர் நீர் பூந்தோட்டத்திற்கு இறைக்கப்படுகின்றது. அத்தொட்டி முழுமையாக நிரம்புவதற்கு எத்தனை நிமிடங்கள் தேவைப்படும்?

1) 9 நிமிடங்கள்  2) 12 நிமிடங்கள்  3) 16 நிமிடங்கள்

17. 

அருகில் உள்ள சமபக்க முக்கோணியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவைப் போன்று முழு உருவின் சுற்றளவு எத்தனை மடங்கு ஆகும்?

1) நான்கு மடங்கு  2) ஐந்து மடங்கு  3) இரண்டு மடங்கு

**18 ஆம், 19 ஆம் வினாக்களில் சரியான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவுசெய்க.**

18. 1) மீன்கள் நீரில் நீந்தியது
2) முயல் துள்ளித் துள்ளி ஓடின
3) மாணவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள்

19. 1) கண்டங்களில் பெரியது அவுஸ்திரேலியா ஆகும்.
2) லீப் வருடத்தில் 366 நாட்கள் உண்டு.
3) இலங்கை பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது.

20) 2016 ஜனவரி மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இவ் வருடத்திலுள்ள சனிக்கிழமைகளின் மொத்த எண்ணிக்கை.

1) 52  2) 54  3) 53

21. இரு பகுதிகளும் சமனாக உள்ளதைத் தெரிவுசெய்க.

1) 3BA9C848 - 3BAC94 க 8
2) DB345 த 9ம - DB354 த 96
3) கச 359AC2 - கச 359AC2

22. மோட்டார் கார்களைக் கழுவும் ஒரு பொறி 30 நிமிடங்களில் இரண்டு மோட்டார் கார்களைக் கழுவும். அதே பொறி அதே வேகத்தில் மூன்று மணித்தியாலங்களில் எத்தனை மோட்டார் கார்களைக் கழுவும்?

1) 10  2) 12  3) 18

23. கண்ணன் பிற்பகல் 3 மணி 30 நிமிடத்திற்கு உறவினர் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது அவனது நிழல் அவனுக்கு இடதுகைப்பக்கம் விழுந்தது எனின், அவன் எத்திசையை நோக்கி நடக்கின்றான்?

1) தெற்கு  2) கிழக்கு  3) மேற்கு

24. ஒவ்வொரு மணித்தியாலமும் 5 நிமிடங்கள் முந்திக் காட்டும் கடிகாரம் ஒன்று மு.ப 6.00 மணிக்கு சரியான நேரத்திற்கு சீர் செய்யப்பட்டு வைத்தால் நண்பகல் 12.00 மணிக்கு கடிகாரம் காட்டும் நேரம்.

1) 12.30 2) மு.ப 11.30 3) மு.ப12.30

25. இராமனின் வயது 27 வருடங்கள். மணி இராமனிலும் இரண்டு வருடங்கள் வயதில் கூடியவன். சுகுணன் மணியைக் காட்டிலும் 5 வருடங்கள் குறைந்தவன். மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

1) 34 2) 59 3) 80

26. எனது அண்ணனின் மகள் எனது அம்மாவை என்ன உறவுமுறை சொல்லி அழைப்பார்?

1) பாட்டி 2) பெரியம்மா 3) மாமி

27. ஒரு பண்ணையிலுள்ள பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை 60 ஆகும். அங்குள்ள பிராணிகளின் தலைகளின் எண்ணிக்கை 25 ஆகும். அங்குள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை முறையே.

1) 20, 5 2) 5, 20 3) 10, 15


28. பாதுகாப்பு நிலையமொன்றில் இரு சக்கர, முச்சக்கர வாகனங்கள் 22 நின்றன. அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை 52 ஆகும். அங்குள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது?

1) 14 2) 8 3) 10

29. மதனும் சேகரும் சேர்ந்து ரூபாய் 1000.00 வைத்திருந்தார்கள். மதனுடைய பணம் சேகருடைய பணத்திலும் நான்கு மடங்காயின் சேகரின் பணம் எவ்வளவு?

1) ரூபா 400.00 2) ரூபா 300.00 3) ரூபா 200.00

✧ **தரப்பட்டுள்ள எழுத்தட்டையை அவதானித்து 30 ஆம் 31 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவுசெய்க.**




30. தரப்பட்டுள்ள அட்டையைத் தளவாடியில் பிடிக்கும் போது "S" என்ற எழுத்து எத்தனையாவது நிரலில் தெரியும்?

1) 1வது 2) 2வது 3) 3வது

31. தளவாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தெரியும் எழுத்துக்கள் எவை?

1) ACW 2) OAW 3) LKS

✧ **சதுரமுகியொன்றின் மூன்று வேறுபட்ட நிலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 32 ஆம், 33 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




32. இலக்கம் 3 இற்கு எதிரே இருக்கும் இலக்கம் எது?

1) 2 2) 5 3) 4



33. இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் இலக்கம் எது?

1) 3 2) 2 3) 4

✣ **கீழே தரப்பட்டுள்ள தராசில் இரு பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமனானவை.**




34. வட்டத்தின் நிறைக்குச் சமனாக உள்ளவை.

1)  2)  3) 

35. ஒருவர் தன்னிடமுள்ள பணத்தில் $\frac{1}{4}$ பங்கை புத்தகம் வாங்கச் செலவழித்தார். எஞ்சிய பணத்தில் $\frac{1}{2}$ பங்கை தனது தம்பிக்குக் கொடுத்தார். எஞ்சியுள்ள பணம் ரூபா 150.00 எனின் அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பணத்தொகை எவ்வளவு?

1) ரூபாய் 300.00 2) ரூபாய் 450.00 3) ரூபாய் 400.00


✣ **ஒருவர் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி 36 ஆம் வினாவிற்கு விடை அளிக்க.**




36. வீட்டிலிருந்து பாடசாலை செல்லும் போது எத்தனை தடவைகள் இடது பக்கத்தால் திரும்பியுள்ளார்?

1) 8 2) 6 3) 10

✣ **வரிப்படத்தை அவதானித்து 37 ஆம், 38 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**




37. கணிதத்தை விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?

1) 7 2) 15 3) 11

38. தமிழ் பாடத்தையும் ஆங்கில பாடத்தையும் மட்டும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?

1) 5 2) 6 3) 3

✣ **பின்வரும் நெய்யரியைப் பயன்படுத்தி விடையளிக்க.**

| | | | |
|---|---|---|---|
| ல் | டி | ர | ணி |
| வ | ஒ | ச | த |
| ம | சி | அ | ட் |

39. நெய்யரில் உள்ள 5 எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய பிராணி ஒன்றின் பெயர்.

1) கரடி 2) மரவணில் 3) ஒட்டகம்

40. மூன்றாவது நிரலில் இரண்டாவது நிரையில் உள்ள எழுத்து எது?

1) சி 2) த 3) ச

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 07இன் விடைகள்

தரம் – 05 7 வினாத்தாள் – I

1. 2
2. 1
3. 1
4. 2
5. 1
6. 3
7. 2
8. 3
9. 1
10. 3
11. 1
12. 3
13. 3
14. 2
15. 2
16. 1
17. 3
18. 3
19. 2
20. 3
21. 3
22. 2
23. 1
24. 1
25. 3
26. 1
27. 2
28. 2
29. 3
30. 1
31. 2
32.
33. 2
34. 2
35. 3
36. 2
37. 2
38. 3
39. 2
40. 3